தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

ஆணை நாள். 20.11.2026

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண்.SA 5546/D/2026

(WP.(MD)No.30231 of 2026 Dt 26.10.2026)

திரு. நரேஷ் அம்பேத்கார் — மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத் துறை,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி – 627 002 .. பொது அதிகார அமைப்பு

ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (20.11.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. நரேஷ் அம்பேத்கார் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி. ச. தனலெட்சுமி, பொதுத் தகவல் அலுவலர் / தலைமை எழுத்தர் (கூ.பொ), உதவி ஆணையர் அலுவலகம், திருநெல்வேலி அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 23.03.2026 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், அருள்மிகு அங்காளஈஸ்வரி அம்மன் கோவிலுக்கு 1940-ல் இருந்து சொந்தமான அனைத்து நிலங்களின் விவரம் (Survey No, Extention, Classification உடன்) நகல்களைப் பார்வையிட்டு அதனுடைய நகல் மற்றும் அசல் வழக்கு எண்: 41/1983 வழக்கின் அனைத்து ஆவணங்களைப் பார்வையிட அனுமதி வேண்டியும் மேலும் அதுபோன்ற தகவல்களை 21 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர் அவர்கள் 30.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பிரிவு 6(3)-ன் கீழ் தலைமை எழுத்தர், உதவி ஆணையர் அலுவலகம், திருநெல்வேலி அவர்களுக்கு மாற்றம் செய்துள்ளார். பொதுத் தகவல்

அலுவலர் குறிப்பிட்ட காலத்திற்குள் தகவல் அளிக்காத காரணத்தால் மனுதாரர் பிரிவு 19(1)–ன் கீழ் 07.05.2026 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல் முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 13.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் அளித்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலரும் தகவல் ஏதும் அளிக்காத காரணத்தால் மனுதாரர் பிரிவு 19(3)–ன் கீழ் 11.06.2026 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார்.

4. அதனைத்தொடர்ந்து. மனுதாரர் தகவல் கோரும் மனுவின் மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையினை அணுகி வழக்கு எண்.WP.(MD).No.30231 of 2026 வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார். உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை இவ்வழக்கினை 23.11.2026–க்குள் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு உத்தரவு பிறப்பித்ததன் அடிப்படையில் இவ்வழக்கு 20.11.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு மாதா அங்காள ஈஸ்வரி அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் சட்டப்பிரிவு 49(1)–ன் கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலானது பாளையங்கோட்டை ஆய்வாளர் உ.மு.எண்.426/77 நாள்.31.08.1977 அறிக்கையின்படி 1977லேயே இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு திருநெல்வேலி இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் செ.மு.ந.க.எண்.16933/77/அ3, நாள்.03.06.1981–ன் படி திருநெல்வேலி மாவட்டம் மற்றும் வட்டம், சிந்துபூந்துறை அருள்மிகு பாளையஞ்சாலைக்குமாரசாமி திருக்கோயில் செயல் அலுவலர் தக்கராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தற்போது மேற்படி திருக்கோயிலின் தக்கார் பாளையங்கோட்டை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு ராமசாமி திருக்கோயில் செயல் அலுவலர் தக்கராக உள்ளார்.

இத்திருக்கோயிலுக்கு நாங்குநேரி தனி வட்டாட்சியர் S.R.No.26/80, நாள்.28.11.1980–ன் படி திருக்கோயில் நிலங்கள் தொடர்பான 1–15 பதிவேடு தயார் செய்யப்பட்டு சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ந.க.எண்.1106/81.எம்4, நாள்.03.01.1981–படி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட 1–15 பதிவேட்டின்படி மேற்படி திருக்கோயிலானது பாளையங்கோட்டை வட்டம், வார்டு 3, பிளாக் 5, நகரளவை எண்.491–ல் 0.13 பரப்பில் அமைந்துள்ளது. மேற்படி திருக்கோயிலானது பாளையங்கோட்டை நகரின் மத்தியப்பகுதியில் அமைந்துள்ள தெற்கு பஜார் பகுதியில் அமைந்துள்ளது.

மேற்படி திருக்கோயில் தவிர அதனை சுற்றியுள்ள பகுதிகளை 5 நபர்கள் ஆக்கிரமித்து கட்டிடங்கள் எழுப்பி உள்ளனர். மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றும் பொருட்டு திருநெல்வேலி இணை ஆணையர் நீதிமன்றத்தில் பலவகை எண்.13/2005, 14/2005, 15/2005, 16/2005, 17/2005 மற்றும் 18/2005 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ஆக்கிரமிப்பினை அகற்ற இணை ஆணையரின் உத்தரவும் பெறப்பட்டுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

மேலும் மனுதாரர் திரு. நரேஷ் அம்பேத்கார் என்பவர் மேற்படி திருக்கோயிலின் இடத்தில் 392 சதுர அடி (வீட்டின் கதவு எண்.17ஏ – 261 சதுர அடி மற்றும் காலிமனை – 131 சதுர அடி) ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளார். மேற்படி ஆக்கிரமிப்பு தொடர்பாக திருக்கோயில் செயல் அலுவலரால் திருநெல்வேலி இணை ஆணையர் நீதிமன்றத்தின் அன்னாரின் தாயார் ராயம்மாள் பெயரில் பலவகை மனு எண்.17/2005–ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 02.06.2009–ல் மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்ற இணை ஆணையரின் உத்தரவும் பெறப்பட்டுள்ளது.

மேற்படி உத்தரவினை எதிர்த்து, ராயம்மாள் இறந்து விட்டதால், அன்னாரின் மகனான மனுதாரர் திரு. நரேஷ் அம்பேத்கார் சென்னை ஆணையர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு 85/2026 வழக்கு தாக்கல் செய்துள்ளார். அன்னாரின் மனுவானது நிலுவையில் இருந்து வருகிறது என ஆணையத்தில் தெரிவித்தார். மேற்படி மனுதாரர் கோரிய தகவல்களுக்கு 03.09.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் அளித்துள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து அதன் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

6. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் பொது அதிகார அமைப்பிடமிருந்து இதுநாள் வரையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 2(j)–ன் கீழ் பார்வையிட அனுமதி அளிக்கவில்லையென்றும் பொது அதிகார அமைப்பினால் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்ட 03.09.2026 தேதியிட்ட பதில் கடிதம் தனக்கு கிடைக்கப்பெறவில்லை எனவும் ஆணையத்தில் தெரிவித்தார்.

7. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலர் 03.09.2026 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல் வழங்கியதாக ஆணையத்தில் தெரிவித்து அதுகுறித்த அறிக்கையை ஆணையத்தில் தாக்கல் செய்தார். ஆனால் மனுதாரருக்கு பதிவு தபால் மூலம் அனுப்பியதற்கான ஒப்புகை அட்டையின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பிக்கவில்லை. மனுதாரரும் பொது அதிகார அமைப்பிடமிருந்து அனுப்பிய தகவல் கிடைக்கப்பெறவில்லை என ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் பொதுத் தகவல் அலுவலர் தான் மனுதாரருக்கு அனுப்பியதாக கூறிய 21 தகவல்களுக்கும் உரிய தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரியவருகிறது. இனம் 4,5,11,15,16 ஆகிய இனங்களுக்கு வருவாய் துறையை அணுகி பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளனர். இனம் 3, 19 –க்கு இந்து சமய அறநிலையத்துறையின் இணையதளம் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்றும் இனம் 15–க்கு 2(F) என்றும் தெரிவித்துள்ளனர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி உரிய பொது அதிகார அமைப்பிற்கு பிரிவு 6(3)–ல் அனுப்பாமல் முழுமையற்ற தகவலாகவே அந்த தகவல் இருந்தது கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு பொதுத் தகவல் அலுவலர் 03.09.2026 வழங்கப்பட்டதாக கூறிய பதிலில் ஆணையம் திருப்தி அடையவில்லை. முதலில் இணை ஆணையர் தனக்கு கீழே பணியாற்றக்கூடிய பொதுத் தகவல் அலுவலருக்கு பிரிவு 19(8)(a)(v)–ன் கீழ் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பற்றிய சட்டப்பயிற்சி வகுப்பு நடத்தி. அதற்கான புகைப்பட ஆதாரத்தோடு ஆணையத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

மனுதாரர் தான் ஒரு வழக்கறிஞர் என்றும் தனக்கு உரிய தகவல் வழங்கவில்லை என்றும் சொல்லி மதுரை உயர்நீதிமன்றத்தில் WP.(MD)No.30231 of 2026 வழக்கு தாக்கல் செய்ததையடுத்து இவ்விரண்டாம் மேல்முறையீட்டு வழக்கினை 23.11.2026-க்குள் நடத்த தகவல் ஆணையத்திற்கு உத்தரவு பிறப்பித்திருந்தது. அதனடிப்படையில் 20.11.2026 தேதியிட்டு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இன்றைய விசாரணைக்கு மொத்தம் 20 வழக்குகள் பட்டியலிடப்பட்டிருந்தன. சேலம் மாவட்டம் வருவாய் துறையில் 8 வழக்குகளும், புதுக்கோட்டை மாவட்டம் ஊரக வளர்ச்சித் துறையில் 7 வழக்குகளும் திருப்பூர் மாவட்டம் ஊரக வளர்ச்சித் துறையில் 1 வழக்கும் நாகப்பட்டினம் மாவட்டம் பள்ளிக்கல்வித் துறையில் 4 வழக்குகள் என மொத்தம் 20 வழக்குகள் பட்டியலிடப்பட்டிருந்தன. இந்த 20 வழக்குகளும் மனுதாரரர்களால் 2024 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இன்று உயர்நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்தும் நோக்கில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேலும் தற்போது 02.11.2026 தேதியிலிருந்து தான் புதிய தலைமை தகவல் ஆணையரும் அதனையடுத்து புதிதாக 4 தகவல் ஆணையர்களும் பதவி ஏற்றுக்கொண்டார்கள். கடந்த ஜூன் மாதம் 15 ஆம் தேதியிலிருந்து 02.11.2026 தேதி வரை 4 தகவல் ஆணையர்கள் மட்டுமே ஓட்டுமொத்த வழக்குகளையும் பிரித்து விசாரணை மேற்கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டது. தற்போது தான் புதிதாக நியமிக்கப்பட்ட தலைமை தகவல் ஆணையரும் 4 தகவல் ஆணையரையும் சேர்த்து மொத்தம் 9 ஆணையர்கள் என்ற இலக்கை அடைந்துள்ளது. சற்றேறக்குறைய 40 ஆயிரம் வழக்குகள் நிலுவையிலுள்ள நிலையில் தற்பொழுது ஆணையம் 2024 வழக்குகளை விசாரித்துக் கொண்டுள்ளது. மனுதாரர் 2026 ஜூன் மாதம் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரருக்கு தகவலைப் பெற்றுத் தர பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை திரு. இரத்தினவேல் பாண்டியன், இணை ஆணையர், திருநெல்வேலி அவர்கள் பிரிவு 18(3)(b)-ன் கீழ் தகவலைப் பெற்றுத் தரும் நோக்கில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மனுதாரரை நேரில் அழைத்து உரிய விசாரணை மேற்கொண்டு மனுதாரரை 2(J)-ல் பார்வையிட வைத்து உரிய ஆவண நகல்களுடன <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது"</u> என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய <u>சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) இக்கோப்புத் தொடர்பான அனைத்து ஆவணங்களின் நகல்களையும் இணைத்து***

ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 21.12.2026 அன்று இணை ஆணையர் மற்றும் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையம் உத்தரவிடுகின்றது.

ஒம்/– (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

வழக்கு எண்.SA 5546/D/2026

பெறுநர்

பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத் துறை,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி – 627 002

மனுதாரர்

திரு. நரேஷ் அம்பேத்கார்
நெ. 17பி, சிவன் தெற்குரத வீதி,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி – 627 002

Copy to file
RA/PC